[1971 டிசம்பர் 16

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பழுதுபட்ட பேருந்துகளின் விவரம் கேட்டார்கள். கடந்த 13-ம் தேதி நாகர்கோவிலிலிருந்து, சென்னைக்கு வந்த பேருந்து, லைட்டு இல்லாததால் மூன்று மணி நேரம் காலதாமதமாகியிருக்கிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எனக்குத் தெரியாது ; இப்பொழுதுதான் தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நெடுந்தூர பேருந்துகளில் இரவு நேரத்தில் இரண்டு ட்ரைவர்களை அமைக்க ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரவு நேர பேருந்துகளில், இரண்டு ட்ரைவர்கள் தான் நியமிக்கப்படுவார்கள்.

திரு. எம். முத்தையா : தலைவர் அவர்களே, ட்ரைவர்களே இல்லாமல் வண்டிகள் ஓட்டப்போகிறோம் என்று சொன்னார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : துணைக் கேள்விக்கு ஒரு கேள்வியா ? அது அனுமதிக்கப்படவில்லை.

மதுரை-இராசசிங்கமங்கலம் விரைவுப் பேருந்துப்பணி

* 489 **வினா—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையிலிருந்து, சிவகங்கை, இளையான்குடி வழியாக, இராசசிங்கமங்கலம் வரை தமிழ்நாடு அரசு பேருந்து (விரைவு வண்டி) போய் வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இராசசிங்கமங்கலத்திலிருந்து மதுரைக்கு செல்லும் பேருந்து வழித்தடப்பகுதிகளில் போதிய பேருந்துகள் விடப்பட்டிருப்பதால் இவ்விரு இடங்களுக்குமிடையே நேரடிப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்வது அவசியமில்லை எனக் கருதப்பட்டது.

போக்குவரத்துத் துறையினரால் வாடகைக்கார்கள் விடப்படுதல்

* 490 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் போக்குவரத்து இலாகாவின் நிர்வாகத்தின் கீழ் வாடகைக்கார்கள் ((taxis)) விடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.